பாதிக்கப்பட்டது என்று அரசு முடிவு செய்யும் நேரத்தில் வேளாண்மைத் துறையும் பொறுப்பு ஏற்றுக்கொண்டு அதை சீர் செய்து கொடுக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தை இந்த அரசாங்கம் அனுதாபத்தோடு பரிசீலிக்கும்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. ஆனால் பாதுகாப்பு இருக்கின்ற ஏனைய தொழில்களுக்கு இழப்பு மானியம் வழங்கப்படுகிறது. அதுபோல் இயற்கைப் பாதுகாப்புகளால் திடீரென்று ஏற்படுகின்ற இழப்புகளுக்கு அரசு மானியம் வழங்கவேண்டும். அந்த மானிய செலவுத் தொகை என்பது விவசாயக் கல்லூரிகளிலே விவசாய செலவுக்கு எவ்வளவு ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் அவர்களுக்கு அந்த இழப்பு மானியம் வழங்க அரசு திட்டம் கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, இப்போதுள்ள நிலையில் நான் அறிவித்த இந்தத் திட்டத்தைத் தவிர வேறு திட்டம் எதுவும் கொண்டுவர வாய்ப்பு இல்லை.

திருப்பத்தூரில் கடைகள் கட்டி வாடகைக்கு விடுதல்.

134—(*வினா எண். 152)— திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள பாஞ்சாலை மைதானம் என்னும் இடத்தில் அரசு மூலம் கடைகள் கட்டி வாடகைக்கு விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே ஏழைகளும் அன்றாடம் காய்கறிகள் விற்றுப் பிழைக்கும் ஏழை எளியவர்கள் 75 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஏழைக் குடும்பங்களுக்கு வாழ்வுகிடைக்கின்ற வகையிலே நான் ஏற்கனவே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது இரண்டு முறை இந்தக் கேள்வியை கேட்டேன். இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அது போன்ற ஏழை எளியவர்கள், போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கின்ற காரணத்தால் அவர்கள் காலி செய்ய வேண்டுமென்று சொல்கின்றார்கள். அதற்குப் பாஞ்சால மைதானம் என்ற இடத்திலே கடைகளைக் கட்டி குறைந்த வாடகைக்கு விட்டால் அந்த

ஏழைகளுக்கு உதவும் வகையிலே, அவர்களை வாழவைக்கும் வகையிலே இருக்குமென்று எண்ணுகின்ற காரணத்தாலேதான் இதை உடனடியாகக் கட்டுவதற்கான ஏற்பாட்டை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, திருப்பத்தூர் நகராட்சியில் நகராட்சி பாஞ்சாலை மைதானம் என்ற இடம் நகர அளவு எண். 564 அமைந்துள்ள அரசு புறம்போக்கு கிராம நத்தம் சுமார் 0.32 ஏக்கர் ஆகும். இந்த நிலத்தை ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நாளங்காடி அமைக்க திருப்பத்தூர் நகராட்சி மன்றம் முடிவு செய்தது. ஆனால் மேற்படி நிலத்தினை நகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்யவோ, குத்தகைக்கு விடவோ இயலாது என வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததை அடுத்து நாளங்காடி அமைக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் கூறுகின்ற இடம் அந்த இடமல்ல. நான் கூறுகின்ற இடம் கோயிலுக்குச் சொந்தமான இடம், கோயிலில் இருக்கின்ற அறங்காவலர்கூட அங்கு காய்கறி கடைகள் வைத்துத் தான் அன்றாடம் வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த வசூல் யாருக்கோ போவதைவிட அந்த ஏழை எளிய மக்களுக்கு உதவும் வகையிலே அந்தக் கடைகளைக் கட்டித் தந்தால் அந்தக் கடைகள் மூலம் அரசுக்கு வருமானமும் வரும்; அவர்களும் பிழைக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கக்கூடிய ஒரு நல்ல காரியத்தை செய்ய முடியும்; எனவே அந்தக் காரியத்தை அரசு உடனடியாக நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவரவர்களே, பாஞ்சாலை மைதானம் என்பது கிராம நத்தம், புறம்போக்கு. நகர் அளவு எண். 364. பாஞ்சாலை என்ற இடத்தில் இது ஊர் நத்தம் என்ற குறிப்புத்தான் என்னிடத்திலே வந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் வேறு தகவல் விரும்புவார்களேயானால் தனிக் கேள்வி போடவும் அல்லது என்னிடத்திலே எழுதிக் கொடுத்தால் மாவட்ட ஆட்சியரோடு தொடர்பு கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஊராட்சி மன்றங்களில் தெரு விளக்குகள்
அமைக்க நிதியுதவி.

135—(*வினா எண். *612*)—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—